Registered as a Newspaper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

Chunda... ...Library

Y.M. CA.

ஈழநாதம்

THE EELANAATHAM

மக்கள் தினசரி

Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆவணி 22 | [07-09-1993] | செவ்வாய்க்கிழமை | ஓசை 201

## போத்தல் விளக்கு எரிகாயங்கள்; வீட்டில் ஏற்படும் விபத்தில் அதிகம்

இலங்கையில் ஏற்படும் மரணங்களில் 51.2 சதவீதமானவை வீட்டு விபத்துக்களால் ஏற்படும் எரிகாயங்களால் ஏற்படுபவை என்றும், அவற்றில் 50 சதவீதமானவை போத்தல் விளக்குகளால் ஏற்படுபவை என்றும் அண்மையில் நடத்தப்பட்ட கணிப்பீடு ஒன்றிலிருந்து தெரியவருகிறது. வைத்தியக் கல்லூரி மாணவர்கள் சிலரால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வில் சிறிலங்காவில் சுமார் 1 5 மில்லியன் வீடுகளுக்கு மின்சார வசதி இல்லை என்றும் மூன்று மில்லியனுக்கு அதிகமான மக்கள் போத்தல் விளக்குகளையே பயன்படுத்துவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் போத்தல் விளக்குகள் தயாரிப்பதற்கு மார்மைட் போத்தல்கள் பயன்படுத்தப்படுவது பாதுகாப்பானதாக இருக்கும் எனவும் அவ் ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது. மார்மைட் போத்தல்கள் சிறியவையாகவும், கனமானவையாகவும், உருளமுடியாதவையாகவும் இருப்பதோடு புரியுடன் கூடிய மூடிகளை உடையவையாகவும் இருப்பதே இதற்கு காரணமாகும்.

# ஆயுதப்படை அமைப்பில் பாரிய மாற்றம்; கூட்டுப்படை தலைமையகம் கலைப்பு!

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் ஒருங்கிணைப்புக் குழு

(கொழும்பு)

சிறிலங்கா ஆயுதப்படை அமைப்பில் உயர் அதிகார மட்டத்தில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதுவரை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்த கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகம் கலைக்கப்பட்டுள்ள அதேவேளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கீழ் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு (Defence Co ordinating Committee -D. C. C.) ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. இவ் அதிகார அமைப்பிலான மாற்றமானது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவின் பணிப்பின் பேரில் மேற்கொள்ளப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று கலைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அதன் பணிகள் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு [D.C.C.] என்ற ஓர் அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கெனப் பாதுகாப்பு குறித்து சகல நடவடிக்கைகளும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் தலைமையிலான இந்த இணைப்புக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர், முப்படைகளினதும் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், தேசியபுலனாய்வு பணியகத் தலைவர், விசேட அதிரடிப்படை அதிகாரி ஆகியோர் இந்த இணைப்புக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

இராணுவ நடவடிக்கைகள், பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகள், சிவில் நிர்வாகம் நிலைபெறச் செய்தல் போன்றவை இந்த பாதுகாப்பு இணைப்புக் குழுவின் முக்கிய பணிகளாகும் எனத் தரிவிக்கப்படுகிறது.

கூட்டுப்படைத் தலைமையகம் கலைக்கப்பட்டு புதிய பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## புதிய பாதுகாப்புசெயலாளராக ஜெனரல் ஹமில்டன் நியமனம்

(கொழும்பு)

புதிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஜெனரல் ஹமில்டன் வணசிங்க நேற்று நியமிக்கப்பட்டார். தமது பதவியை இராஜினாமா செய்த எயர்மார்ஷல் வோல்டர் பெர்னாண்டோவின் இடத்திற்கே ஹமில்டன் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேசமயம் நேற்று சிறிலங்கா பாதுகாப்பு அமைப்பில் செய்யப்பட்ட மாற்றங்களின் பிரகாரம் புதிதாக உரு



## போரை தொடரும் நோக்கமே புதிய இராணுவ கட்டமைப்பு

### கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர்

(லண்டன்)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஜனாதிபதி விஜயதுங்கவின் நிலைப்பாட்டுக்கு அழுத்தம் கொடுக்கவும், புலிகளுக்கு எதிரான யுத்தத்தை தொடர்ந்து மேற்கொள்வது என்ற அரசின் நோக்கத்தை மீண்டும் வலியுறுத்தவே பாதுகாப்பு அமைப்பில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது

இவ்வாறு கொழும்புப் பல்கலைக்கழக அரசியல் துறை பேராசிரியர் கலாநிதி பொ. சரவணமுத்து பி பி ஸி நிருபருக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு அரசியல திட்டம் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைக்கு இருக்கவில்லை. இப்போது அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு இணைப்புக் குழுவுக்கு பிறகும் கூட சிக்கல்கள் ஏற்படலாம். இராணுவ மற்றும் அரசியல் ரீதியாகவும் சில விளைவுகள் ஏற்படலாம். இதுவரை நியமிக்கப்படாத தேசிய பாதுகாப்பு அமைச்சர் பதவி நியமனம் செய்யப்பட்ட

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

## கனேடியகப்பல்வருகையை அசட்டை செய்யக்கூடாது

### தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர்

ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு கனேடியக் கப்பல் ஒன்று இந்தியாவின் மேற்குக் கரை நோக்கி வருவதாக வெளி

நேற்று சென்னையில் செய்தியாளர்களிடையே பேசிய அவர் தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர் குலைந்...

களையும் ஏற்றிக்கொண்டு கனேடியக் கப்பல் ஒன்று இலங்கையின் வடபகுதி நோக்கி நகர்

சேவைப் பணியகத் தலைவர், விசேட அதிரடிப்படை அதி நியமிக்கப்பட்டார். தமது பதவியை இராஜினாமா செய்த இதேசமயம் நேற்று சிறிலங்கா பாதுகாப்பு கட்டமைப்

### பாதுகாப்பு அமைச்சின் செயலர்

# வோல்டர் பெர்னான்டோ ராஜினாமா உட்பூசல் காரணமாம்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக பணியாற்றிய எயர்வைஸ் மார்ஷல் வோல்டர் பெர்னான்டோ தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார் இவர் தனிப்பட்ட காரணங்களுக்காகவே ராஜினாமா செய்ததாக ஜனாதிபதி செயலகம் விடுத்த செய்தியில் குறிப்பிடப்பட்டது.

எனினும் படை அதிகாரிகளுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் இடையில் நீண்ட காலமாக நிலவி வந்த கருத்து பேதங்களும், நேற்று பாதுகாப்பு கட்டமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டமையுமே, வோல்டர் பெர்னான்டோ பதவியை துறப்பதற்கு காரணம் எனக் கூறப்படுகின்றது.

### எதிர்கால இராணுவ நடவடிக்கை

# பாதுகாப்பு அமைச்சு முக்கிய பங்கு வகிக்கும்

(கொழும்பு)

சிறிலங்கா பாதுகாப்பு கட்டமைப்பில் நேற்று செய்யப்பட்ட மாற்றமானது எதிர்காலத்தில் இராணுவ நடவடிக்கைகள் குறித்த மிக முக்கிய பங்கை வகிக்க வழிவகுத்துள்ளது என பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் தெரிவித்தார்

இராணுவ உயர் அதிகாரிகளிடையே நீண்டகாலமாக கருத்து வேறுபாடுகள் நிலவி வந்திருக்கின்றன. இந்நிலையில் புதிய மாற்றம் அவர்களிடையிலான கருத்து பேதங்களை தீர்க்குமா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். பதவிகளை மட்டும் மாற்றியமைத்து உருவான புதிய பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவினால் கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகம் கலைக்கப்பட வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளதாகவும் பி.பி.ஸி மேலும் தெரிவித்தது.

# பாதுகாப்பு நிலைகளுக்கு அமைச்சர் விஜயம்

(கொழும்பு)

உள்நாட்டு அலுவல்கள், மாகாணசபைகள் அமைச்சரும் வெளிவிவகார ராஜாங்க அமைச்சருமான திரு. ஜோன் அமரதுங்கா நேற்று வடகிழக்குப் பகுதிகளில் உள்ள முன்னணிப் பாதுகாப்பு நிலைகளுக்கு நேரடி விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இவ்விஜயத்தின்போது பாதுகாப்பு நிலைகளை நேரடியாக அவதானித்ததுடன் படையினருக்கு வழங்கப்பட்டிருக்கும்

( 4 ஆம் பக்கம் பார்க்க )



வான பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவின் (Defence Co-ordinating Committee தலைவராகவும்ஜெனரல் ஹமில்டன் வனசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இம் முறை ஹமில்டன் வனசிங்க பாதுகாப்பு அமைச்சு செயலர் புதிய பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழு தலைவர் எனும் இரு பெரும் பாதுகாப்பு பொறுப்புகளை ஏற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கரை நோக்கி வருவதாக வெளியான செய்திகளை மாநில அரசு அசட்டை செய்யக் கூடாது என தமிழக எதிர்க் கட்சித் தலைவர் எஸ் ஆர். பாலசுப்பிரமணியம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர் குலைந்து வருகிறது. அண்மையில் தமிழகத்தில் கொள்ளை, வழிப்பறி, அதிகரித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களையும் வெடி மருந்து யின் வடபகுதி நோக்கி நகர்ந்து வருவதாகவும் இத்தகவலையடுத்து இந்தியாவின் மேற்கு கரையில் இந்திய கடற்படை பாதுகாப்பு உஷாராக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

# கிளாலிக் கரையோரத்தில் புக்காரா குண்டு வீச்சு

கிளாலிக் கடற்பகுதியில் நேற்று இரவு சிறிலங்காவின் விமானப்படை விமானங்கள் அகோரக் குண்டு வீச்சுத் தாக்குதல்களையும் கலிபர் தாக்குதல்களையும் மேற்கொண்டன

நேற்று இரவு 8.30மணியளவில் கிளாலிக் கடற்பரப்பிற்கு வந்த சிறிலங்கா விமானப் படையின் உலங்குவானூர்தி ஒன்று பல தடவைகள் வட்டமிட்டு கலிபர் தாக்குதல்களை நடத்தியது.

இதனைத் தொடர்ந்து ஒளி பாய்ச்சியவாறு வந்த இரு புக்காரா குண்டுவீச்சுவிமானங்கள் கலிபர் தாக்குதல்களையும் குண்டுவீச்சு தாக்குதல்களையும் மேற்கொண்டன கடலிற்குள்ளும் கரையோரப் பகுதியிலும் இத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

விமானப்படையின் தாக்குதல் ஆரம்பமானதைத் தொடர்ந்து கிளாலி பயண

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தப்பியோடிய கைதிகள் சிறையில் சுட்டுக்கொலை

(கொழும்பு)

மகர சிறையில் இருந்து தப்பியோட முனைந்த ஐந்து சிறைக் கைதிகள் நேற்று காலை சிறைக்காவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சிறைக்காவலரை தாக்கிவிட்டு சிறைச்சாலை சுவரை தாண்டி ஓட முயன்ற போது இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். சுட்டுக் கொல்லப்பட்ட கைதிகளில் மூவர் 1980

( 4 ஆம் பக்கம் பார்க்க )

### மட்டக்களப்பில் அட்டகாசம்

## படையினர் தாககுதல் பொதுமகன் பலி

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு கோயிற் போரதீவு - உறுகாமம் என்ற பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக நடத்திய தாக்குதலில் பொதுமகன் ஒருவர் பலியானார். படையினரால் இப்பகுதியில் பொதுமக்களது சில வீடுகளும் கடைகளும் தீவைத்துக் கொளுத்தப்பட்டன.

கடந்த வெள்ளி பிற்பகல் 3 மணியளவில் வெல்லாவெளி, பெரியபோரதீவு முகாம் படையினர் கோவிற்போரதீவு - உறுகாமம் என்ற இடத்தில்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## கிளாலி-பூநகரி படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடை பெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## காரைநகர் படையினர் பீரங்கித் தாக்கு

(தொல்புரம்)

காரைநகர் காவல் நிலைகளிலுள்ள சிறிலங்கா படையினர் நேற்றுக் காலை 8 00 மணியளவில் பொன்னாலை, மூளாய், சுழிபுரம் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர். இப்பீரங்கிகள் கடற்பரப்பிலும் சுழிபுரம், பொன்னாலை கடற்கரையை அண்டித்தபகுதிகளிலும். மூளாய் மக்கள் குடியிருப்புக்களை அண்மித்த பகுதியிலும் வீழ்ந்து வெடித்தன

ஊர்காவற்றுறை, மண்டைதீவு, அராலித்துறைப் பகுதியிலுள்ள இராணுவத்தினர் அராலி கொத்தத்துறைப் பகுதியை நோக்கி எறிகணை வீச்சினை இதேதினம் காலை 8 30 மணியளவில்மேற் கொண்டனர். இவ்விரு சம்பவங்களிலும் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரியவருகிறது.

பொன்னாலை, சுழிபுரம், மூளாய் ஆகிய பகுதிகளில் உள்ள பொது மக்கள் வாழும் பகுதிகள் மீது கடந்த சில நாட்களாக சிறிலங்கா இராணு

[4 ஆம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## மதுப்பிரியர்களே!

உங்களுக்கு ஓர் புதிய உலகம்! புதுமை - இனிமை - அனைத்தும் நிறைந்த "மதுச்சாலை" 812 பருத்தித்துறை வீதி, [முத்திரைச் சந்தை] யாழ்ப்பாணம். [5820]

## அதிர்ஷ்டசாலிக்கு அழகிய கைக்கடிகாரம்

எமது ஸ்தாபனத்தில் மணிக்கூடு றேடியோக்கள் சேவிஸ் செய்யும் வாடிக்கையாளர்களின் பற்றுச்சீட்டு இலக்கங்கள் ஒவ்வொரு மாத முடிவிலும் அதிர்ஷ்ட இலாபச்சீட்டிழுப்பு மூலம் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு அதிர்ஷ்டசாலிக்கு அழகிய Casio கைக்கடிகாரம் பரிசாக வழங்கப்படும் "டிக்கா வாச் அன்ட றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். [சி-7339]

## விற்பனைக்கு

நல்லநிலையில் உள்ள விலிவியர்ஸ் மார்க் 25 நீரிறைக்கும் இயந்திரமும் C50 மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: K சங்கர், பிரதாப் வீடியோ நிலையம், கண்டிவீதி, சாவகச்சேரி (5062)

## தவறிவிட்டது

திருநெல்வேலி A G A அலுவலகத்திற்கும் காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோயிலடி கேசாப் பிள்ளையார் கோயிலடிக்கும் இடையில் 24-8-93 அன்று காலை தி. பத்மாவதியினுடைய நான்கு உணவு முத்திரைகள் (மண்ணெண்ணெய் முத்திரை) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (5908)

## மக்கள் வங்கி மீதான கட்டுப்பாடு தளர்வு

யாழ். மாவட்டத்தில் சுயமுயற்சி விவசாயம் போன்றவற்றிற்கான கடன்களை வழங்குவதற்கு மக்கள் வங்கிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

# வடமராட்சி கோட்டத்தில் பொது அமைப்புகளுடன் சந்திப்பு

வடமராட்சிக் கோட்டத்திலுள்ள பொது அமைப்புகளுடனான சந்திப்பு எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற இருப்பதாக யாழ் மாவட்ட அரசியல் துறைச் செயலகம் அறிவித்துள்ளது. இப்பொதுக் கூட்டத்தில் சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அமைப்புகள், பலநோக்கு கூட்டுறவு சங்க இயக்குநர்கள், ஊழியர்கள், தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு சங்கங்களின் இயக்குநர்கள், ஊழியர்கள், தச்சுத் தொழிலாளர் சங்கம், சீமெந்துக் கட்டட தொழிலாளர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், வகுப்புத் தொழிலாளர் சங்கம், தமிழ் பேசும் போக்குவரத்து ஊழியர் சங்கம், ஆலை உரிமையாளர்கள், பேக்கரி உரிமையாளர் சங்கம், முதலிய வெகுஜன அமைப்புக்களின் உறுப்பினர்கள் கலந்து கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## சிரமதானப் பணி

தொல்புரம் மத்தியசனசமூக நிலையமும், தேசிய சர்வோதய சிரமதான இயக்கமும் இணைந்து இன்று செவ்வாய்க்கிழமை சிரமதானப்பணிகள் செய்யவுள்ளன. பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் நடைபெறவுள்ள தேர் உற்சவத்தை முன்னிட்டு அவ் ஆலய சுற்றாடல்கள் சிரமதான அடிப்படையில் தொண்டர்களால் துப்புரவு செய்யப்படவுள்ளதென தேசிய சர்வோதய சங்கானைப் பிரதேச இணைப்பாளர் செல்வி இ. யோகேஸ்வரி தெரிவித்துள்ளார். (41)

## வெற்றிலைக்கு தட்டுப்பாடு

யாழ். மாவட்டத்தில் வெற்றிலைக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இத்தட்டுப்பாட்டிற்கு போக்குவரத்து பிரச்சினையும் காரணமாகும் என தெரிகிறது. [88]

MATHS CENTRE
NELLIADY
A/L 94 [One Year Course]
பௌதிகம் – இரு. ஜெயசீலன்
ஆரம்பம்: 7-9-93
செவ்வாய் 3.15 p.m.
[பாட விதானங்கள் பற்றியவை நேரில்]
[5903]

1994இல் நடைபெறவுள்ள
ஆண்டு 5
பொதுப் பரீட்சைகளுக்கான
- விசேட பயிற்சி வகுப்புகள்
- கட்டுரை வரைவதில் சிறப்புப் பயிற்சிகள்
- 30 பயிற்சிப் பரீட்சைகள்

மாணவரின் தற்போதைய தரத்திற்கேற்ப பிரிவுகள் அமைப்பதற்கான போட்டிப் பரீட்சை ஒன்று அக்டோபர் 3ஆம் திகதி நடைபெறும்.

இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன் பெயர்களைப் பதிவு செய்வோர் மட்டுமே பரீட்சைக்கு தோற்றி வகுப்பில் அனுமதிக்கப்படுவர்.

– அதிபர்.

ESTD:-1973 REGD:- No J/7993

# 65 வயதுக்கு மேற்பட்டோர் சேவையில் நீடிக்க முடியாது

ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டு கோட்ட ரீதியாக கடமையாற்றுபவர்களில் 31.7.93ற்கு முன்னர் 65 வயதைப் பூர்த்தியடைந்துள்ளவர்களின் சேவையை உடனடியாக நிறுத்துமாறு யாழ் பிரதேச கல்வித்திணைக்களம் சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் பணித்துள்ளது.

மேலும் இவ்வாறு கடமையாற்றும் ஒப்பந்த அடிப்படை ஆங்கில ஆசிரியர்களுக்கு ஆடி 93ற்குரிய சம்பளத்தை மட்டும் வழங்கி 01 08. 93 தொடக்கம் அவர்களுடைய சேவையை தொடராதிருக்க நடவடிக்கை எடுக்குமாறும் மேலும் கேட்டுள்ளது. [17]

## கண்டெடுப்பு

(வடமராட்சி)

வைகுண்டம் ஜெகநாதன் என்பரின் அடையாள அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். (யோ)

# சம்பள அதிகரிப்பு இம்மாதம் முதல் கிடைக்கும்

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 37;92-இன்படி 01 07 93 தொடக்கம் வழங்கப்பட வேண்டிய புதிய சம்பள அதிகரிப்பை இம்மாதச் சம்பளத்துடன் வழங்குமாறு சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இக்கடிதத்தின் பிரதி பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் சகல பயிலுநர் ஆசிரியர்களும் ஒரேவிதமான சம்பள அதிகரிப்பையும் இம்மாதம் பெறுவார்கள் எனவும் யாழ் பிரதேச கல்வித்திணைக்களம் தெரிவித்துள்ளது. (17)

## கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

செல்லையா பாலசுப்பிரமணியம் ஏழாலை மத்தி ஏழாலை என்பவரது வங்கிப்புத்தகமொன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## 43-வது ஆண்டுவிழா

உரும்பராய் ஞானவைரவ கோயிலடி சன சமூக நிலையத்தில் நாற்பத்து மூன்றாவது ஆண்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. நிலையத் தலைவர் சி.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக் கழக கல்வியியல் துறைத் தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகமும், கௌரவ விருந்தினராக பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலாவும் கலந்து கொள்ளவுள்ளனர். தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தேசியக் கொடியை ஏற்றி நிழ்ச்சிகளை ஆரம்பித்துவைப்பார். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

## விளையாட்டுப் போட்டி

(தொல்புரம்)

அளவாய் கிழக்கு மாயக்கை குடியேற்றம் பாரதி சனசமூக நிலையமும், தேசிய சர்வோதய சிரமதான இயக்கமும் இணைந்து நடாத்திய பாரதி பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன

பாரதி சனசமூக நிலைய மைதானத்தில், நிலையத் தலைவர் க பரஞ்சோதி தலைமையில் நடைபெற்ற மேற்படி போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலர் திரு செ. ஸ்ரீனிவாசன், சர்வோதய மாவட்ட இணைப்பாளர் திரு. பா. செல்வரத்தினம் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் பா.பைந்தமிழன், சர்வோதய பாலர் பாடசாலைப் பொறுப்பாளர் செல்வி கா. திலகராணி அவர்களும் மற்றும் பலரும் கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்தனர். (41)

## தரு சின்னம் பெற்றார்

யாழ் மத்திய கல்லூரி சாரணர் குழுவின் முன்னாள் தலைவரும், தற்போது நோர்வேயில் பயிலும் மாணவருமாகிய கலாநெறஜி அண்மையில் நோர்வேயில் நடைபெற்ற சாரணர் ஜம்பொறியில் சாரணர்களுக்குரிய அதியுயர் விருதான தரு சின்னத்தைப் பெற்றுள்ளார்.

# சோளம் விதை விநியோகிக்க

# ஜெயவர்த்தன நிலையக் 85 மில்லியன் ரூபா செலவீடு

[கொழும்பு]

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கலாசார நிலையத்திற்காக அரசாங்கம் 85 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது என்று தெரியவருகிறது. ஜெயவர்த்தன குடும்பத்தினரால் சில அரசாங்கத்திற்கு முன்பு விற்கப்பட்ட இக்காணியை மீளப் பெறுவதற்காக 1988-ம் ஆண்டின் பெப்ரவரி மாதத்தில் ஐம்பது மில்லியன் ரூபாவை அரசாங்கம் செலவிட்டது என்றும், இக் காணியில் கலாசார நிலையம் அமைக்கப்படுவதற்காக தற்போது 35 மில்லியன் ரூபா ஜனாதிபதி நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிருஷ்ண ஜயந்தியும் உறியடி உற்சவமும்

இணுவில் சிறீ பரராச சேகரப்பிள்ளையார் கோவிலின் சிறி கிருஷ்ண ஜயந்தி விழா நாளை எட்டாம் திகதி புதன்கிழமையன்று நடைபெறவுள்ளது. பிற்பகல் நான்கு மணியளவில் அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி அதைத் தொடர்ந்து உறியடி உற்சவமும், திருவுலாவும் இடம்பெறும். பிரபல நாதஸ்வர வித்துவான் வி கே. பஞ்சமூர்த்தி குழுவினரின் நாதஸ்வர இசையும், புல்லாங்குழல் கச்சேரியும் இடம்பெறும்.

## தெருக்கூத்து

"போர்க்காற்று" என்னும் இரவுநேரத் தெருக்கூத்து நிகழ்ச்சிகளை விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர் குடாநாட்டில் நிகழ்த்தி வருகின்றனர். (21)

# 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## 2-ம் லெப். புகழரசன்

[சின்னத்துரை கோணேஸ்வரன்]

தமிழீழ மண்ணில்: 05. 09. 1977 தாயக மண்ணில்: 25. 07. 1993

வீறுடன் எழுந்து போர்க்களமாடிய புலியே புகழரசா
வீணரை அழித்து வெங்களமாடிய வேங்கையே புகழரசா
மண்கிண்டி மலை மீது பாய்ந்த வீரனே புகழரசா
மணலாற்றில் மாவீரனாகிய மறவனே புகழரசா
தமிழீழ தாயகத்தை தாகமாய் கொண்டவனே
தலைவர் தானையிலே ஓர் புலியாய் நின்றவனே
கலங்கவில்லை உன் முடிவை நாம் நினைத்து
களம் நோக்கிப் போவோம் நாம் உன் நினைவில்.

07 09 1993 இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சக போராளிகளையும், உற்றார், உறவினர், நண்பர்களையும் அழைக்கின்றோம்.

சத்தியகாடு அகதி முகாம் சுழிபுரம். (5849) சின்னத்துரை குடும்பத்தினர்

பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

அண்மையில் கொழும்பில் மக்கள் வங்கியின் உயர் அதிகாரிகளுடன் வடபிரதேச முகாமையாளர் பேச்சுவார்த்தை நடத்தியதன் பயனாக முன்பு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதாக வடபிராந்திய மக்கள் வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [41]

## பிரதமர் குடியரசுத்தலைவர் சந்திப்பு

(டில்லி)

இந்தியப் பிரதமர் பி.வி நரசிம்மராவ் நேற்றுமுன் தினம் குடியரசுத்தலைவர் மாளிகைக்குச் சென்று அங்கு குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவை சந்தித்துப் பேச்சு நடத்தினார் இப்பேச்சுவார்த்தை ஒருமணி நேரம் வரை நீடித்தது. இது ஒரு வழக்கமான சந்திப்பு என்று குடியரசுத்தலைவர் மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இச் சந்திப்பின் போது பிரதமர் தமது சீனப் பயணம் குறித்து விளக்கியதாகவும் கூறப்பட்டுள்ளது.

## போருக்கு செல்வோம் தெருக்கூத்து

(யாழ்ப்பாணம்)

எம்மண்ணை ஆக்கிரமிக்கவும் மக்களை அழிக்கவும் சிங்கள அரசும் இராணுவமும் மேற்கொண்டு வரும் முயற்சிகளை முறியடிக்க மக்கள் அனைவரும் போராட்டத்தில் முழுமையான பங்காளிகளாக இணைந்து கொள்ள வேண்டும் என்பதை விளக்கும் வகையில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக தீவகப் பிரிவினரால் போர்க்கால எழுச்சி யாத்திரையும் 'போருக்குச் செல்வோம்' என்னும் தெருக்கூத்தும் தற்போது குடாநாட்டில் பல இடங்களிலும் தீவக மக்கள் தங்கியுள்ள முகாம்களிலும் பரவலாக நடாத்தப்பட்டு வருகின்றன. [22]

---

# The Express Institute

IRUPALAI - KOPAY

(சி-7360)

---

## ஆண்டொன்றின் நீங்காத நினைவலைகள்



## இராசதுரை திவாகரமூர்த்தி

(பிரான்ஸ்)

அன்னையின் மடியில்: 27-05-1973

ஆண்டவன் அடியில்: 19 08 1992

திதி 07-09-1993

ஆண்டொன்றில் எம்மை ஆழாத்துயரிலாழ்த்தி
மீளாத்துயில் கொண்டிருக்கும் எமதினிய மஞ்சியே
பாசம்மிகு தாய் தந்தையருடன் சோதரராய்
தம்பியரும் தங்கையரும் நெகிழ்வான
அன்புடனே மைத்துனியும் இருக்க
எப்படியடா சென்றாய் நீ தனியே!
நீ நின்ற இடம் நெஞ்சினில் நிறை
நிழலாடுதடா பந்த பாசங்களை துறந்து
சொர்க்கம் தனைசென்ற மஞ்சியே
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நவக்கிரி, புத்தூர்.

தந்தை, தாய். சகோதரர்கள், மைத்துனி, உறவினர்கள்

(5829)

---

## சோளம் விதை விநியோகிக்க த.பொ.மே.நி. நடவடிக்கை

யாழ். மாவட்டத்திலே 1993/94 காலபோகத்தில் சோளப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் உயர் விளைவினைத் தரக்கூடிய சோளம் விதைகளை ஒரு கிலோ 28 ரூபாய் வீதம் விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

வீட்டுத் தோட்டத்திலே சோளப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் ஊக்குவிப்பு முயற்சியாக ¼கிலோ சோளம் விதை இலவசமாக வழங்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி சோளம் விதைகளைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட, கோட்ட, மற்றும் சகல வட்டச் செயலகங்களுடனும் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

---

## அதிபர்களுக்கான கூட்டம்

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த வட்டுக்கோட்டை, சுழிபுரம், பண்டத்தரிப்பு, காரைநகர் கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் பன்னிரண்டு மணியளவில் வட்டுக்கோட்டை திருஞான சம்பந்த வித்தியாசாலையிலும் தெல்லிப்பழை, அம்பனை, மல்லாகம் இளவாலை, காங்கேசன்துறை அளவெட்டி கொத்தணிகளைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை நண்பகல் இரண்டு மணியளவில் மருதனார்மடத்திலுள்ள யூனியன் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது என்று கோட்டத்திற்கான பிரதிக் கல்விப்பணிப்பாளர் துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

## போட்டிகள்

அரியாலை சிற்றம்பலம் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரபந்தாட்ட சுற்றுப் போட்டியின் கால் இறுதி ஆட்டங்கள் இன்றும் நாளையும் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்று பிற்பகல் 3 30 மணியளவில் கே.கே.எஸ் மகிழகத்தின் ஏ பிரிவு அணியை எதிர்த்து மோகனதாஸ் வி. கழக ஏ பிரிவு அணியும், ஏ எஸ்.எஸ் சீ அணியை எதிர்த்து ஆவரங்கால் மகி கழக பி அணியும் மோதவுள்ளன.

## தேர்த்திருவிழா

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான தேர்த்திருவிழா 8 ஆம்திகதி புதன்கிழமையும் அதனைத் தொடர்ந்து தீர்த்தத் திருவிழா 9 ஆம் திகதி வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளது. [41]

## 40 ஆயிரம் ஹெக்டர் காடு வருடாந்தம் அழிகிறது

(கொழும்பு)

கிழக்கிலங்கையில் மிகவும் மோசமாக காடுகள் அழிக்கப்பட்டு வருகிறது இலங்கையில் வருடமொன்றிற்கு 40 ஆயிரம் ஹெக்டர்காடுகள்விவசாயகுடியேற்றம் மற்றும்வேறு தேவைகளுக்காக அழிக்கப்பட்டு வருகின்றனவென்று வனபரிபாலன திணைக்களத்தின் அறிக்கையில் இருந்து தெரிய வருகிறது.

---

## நினைவு கூருகின்றோம் ...

## 1993-09-07

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் வவுனியா - தம்பனைப் பகுதியில் தேசவிரோத சக்திகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

லெப். கொலின்ஸ்/லூக் [சர்வேஸ்வரன் லூக்நாதன் - கள்ளாட்டி, அடம்பன் - மன்னார்]

வவுனியா - குளவிசுட்டான் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

அமீர்/அமல் [தம்பையா ரவிச்சந்திரன் இராஜேந்திரன் - வவுனிக்குளம் - மாங்குளம்]

1988ஆம் ஆண்டு வவுனியா - செட்டிக்குளம் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

யோகசிவம் [அழகர் பரமநாதன் கணேசமூர்த்தி - நீலியமோட்டை - வவுனியா]

1990ஆம் ஆண்டு முல்லைத்தீவு - மாங்குளம் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

அருள் (வேலுப்பிள்ளை சுகுமார் - மருதோடை, நெடுங்கேணி - மணலாறு)

மட்டுநகரில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட குமாரவேலியர் கிராமத்தைச் சேர்ந்த 03 தமிழர்கள். முஸ்லிம் காடையர்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட நொச்சிமுனை, கலைமகள் வீதியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

முகமத் (சிவஞானம் சுபாகரன் - விநாயகபுரம் திருக்கோயில் - அம்பாறை)

லெப். குட்டி (வில்வராசா ரவிச்சந்திரன் - தனங்கிளப்பு - சாவகச்சேரி)

வசந்தா (ஜெயவதனி சண்முகநாதன் - மாதகல் - யாழ்)

1992ஆம் ஆண்டு புலோப்பளைக் கடலில் கடற்படையினரின் தாக்குதலின்போது காணாமற் போன 02 பொதுமக்கள்,

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

[வி/7359]

**சிந்தனைக்கு**

அதிசயம்தான் ஆனால் உண்மை.
உண்மை என்றுமே விசித்திரமானது.
கற்பனையை விடவும் அற்புதமானது.

— பைரன் பிரபு

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 07-09-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

## மாற்றத்தை ஏற்க அரசு தயாராயில்லை

அண்மைக் காலமாக உலக அரசியலில் பெரும் மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. கடந்த மூன்று வருட காலத்தில் இடம்பெற்ற இம் மாற்றங்கள் உலகின் அரசியற் போக்கையே மாற்றியுள்ளன எனலாம். இதில் பல தேசிய இனங்கள் தமது விடுதலையை உறுதிப்படுத்திக் கொண்டன. பல தமது விடுதலைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தியுள்ளன.

கடந்த மூன்றுவருட காலத்தில் ஏற்பட்ட பெரு மாற்றங்களில் சோவியத் யூனியனின் சிதைவு முக்கியமானதாகும். இச் சிதைவினால்பல தேசிய இனங்களின் சுதந்திர அரசுகளும் உருவாகின. அதேவேளை பல சிறியதேசிய இனங்கள் தமது சுதந்திரத்திற்காகப் போராடவும் முற்பட்டுள்ளன. சோவியத் யூனியனின் சிதைவானது அதற்குவெளியிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. செக்கோ செலவேக்கியா சமாதானமாகவே இரண்டாகப் பிரிந்து சென்றது. யூக்கோ செலவேக்கியாவும் பல துண்டுகளாக உடைந்ததாயினும் அவை தமது சுதந்திரத்திற்காகத் தற்பொழுதும் இரத்தம் சிந்திக் கொண்டிருக்கின்றன.

இதேவேளை, மூன்றாம் உலகில் எரித்திரியா தனது சுதந்திரத்தை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளது. எத்தியோப்பியாவில் இருந்து பிரிந்து புதிய அரசாக எரித்திரியா உருவாகியுள்ளது. முப்பதாண்டு விடுதலைப் போர் முடிவிற்கு வந்தது.

இம்மாற்றங்களின் தொடர்ச்சிபோன்று இஸ்ரேல் இன்று பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரிக்க முன்வந்துள்ளது. இஸ்ரேலும் - யாசிர் அரபாத்தும் செய்து கொள்ள முற்படும் உடன்பாடு எந்தளவிற்கு பாலஸ்தீனியரின் அங்கீகாரத்தைப் பெறும், பாலஸ்தீனியரின் விடுதலைக்கு ஊக்கம் கொடுப்பதாக இருக்கும் என்பதெல்லாம் ஒருபுறம் இருக்க, பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை இஸ்ரேல் அங்கீகரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை, மாறிவரும் உலகின் இன்றைய சூழ்நிலை உருவாக்கி உள்ளது என்பதே முக்கிய

வட மத்திய மாகாண சபை முதல்வர்

# தெரிவில் இழுபறி ஏற்படின் கலைத்து விடக் கோருவேன்

### முதல்வர் எச்சரிக்கை

(கொழும்பு)

சபை முதல்வராக ஏ. ஜயதிலக்கவைத் தெரிவு செய்வதற்கு எடுக்கும் முயற்சிக்கு அரசாங்கத் தரப்பில் இருந்து இடையூறு நேருமாயின் மாகாண சபையைக் கலைத்து விடும்படி ஆளுநருக்குப் பரிந்துரை செய்யப் போவதாக வட மத்திய மாகாண முதல்வர் ஜி டி மகிந்தசோம எச்சரிக்கை விடுத்துள்ளார்.

செய்தியாளர்களின் மதியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், ஆளும் கட்சி உறுப்பினர்கள் எவரேனும் ஜயதிலக்க தெரிவு செய்யப்படுவதை எதிர்ப்பார்களேயானால், அவர்கள் கட்சியின் தீர்மானத்தை மீறுவோர்கள் என்றே கருதப்பட நேரிடும் என்றும். முதலமைச்சர் என்ற வகையில் தன் மீது அவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்றே கருதப்படும் என்றும் தெரிவித்தார்.

முதலமைச்சர் மகிந்தசோம மேலும் தெரிவிக்கையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் கடந்த ஜூலையில் நடத்திய பேச்சுவார்த்தையின் போதே முன்பு சபை முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டிருந்த திருமதி சோமா ஹேரத்தை பதவி துறக்குமாறு கோருவது என்று முடிவு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் அவரது இடத்துக்கு ஏ ஜயதிலக்கவைத் தெரிவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது

எனவே இது தொடர்பாக முரண்பாடுகள் ஏற்பட்டு சபையின் சுமுகமான நடவடிக்கைக்குக் குந்தகம் ஏற்படுமாயின் சபையைக் கலைத்துவிடும்படி தான் ஆளுநருக்கு ஆலோசனை கூற வேண்டி வரும் என்றும் தெரிவித்தார்.

### 14கடைகள் தீயினால் நாசம்

மின்சாரஒழுக்குஏற்பட்டதால் காலி நகரின் மத்தியில் இருந்த பதின்னான்கு கடைகள் எரிந்து சாம்பராகியுள்ளன. கடந்த புதனன்று அதிகாலைஏற்பட்ட தீ நண்பகல் வரை எரிந்து கொண்டிருந்ததாகவும் தீயணைப்பு படையினரும் பொலிசாரும் நெருப்பைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வருவதில் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருந்ததாகவும் கூறப்பட்டது.

## முஸ்லிம்கள் தாக்கப்படாத ஒரே நாடு சிறிலங்கா தான்

— காமினி ஜயசூரியா பெருமிதம்

(கொழும்பு)

முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தாத ஒரே ஒரு நாடு சிறிலங்கா தான் என்று முன்னாள் அமைச்சரும், சிங்கள ஆராய்ச்சிக சங்விதானவின் தலைவருமான காமினி ஜயசூரிய பெருமிதம் வெளியிட்டுள்ளார்.

மகாநுவர லமாரக்சா பௌத்த சமிதியின் 16-வது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், தொண்டமான் போன்றவர்களால் வெகுவிரைவில் மலையகத்திலிருந்து பௌத்த சிங்களவர்கள் விரட்டப்படும் நிலை ஏற்படும் என்றும் தெரிவித்தார். ஆட்சியில் நீடிப்பதற்காக தமிழ் வாக்குகளினால் கவரப்பட்டும் ஆட்சியாளர்கள் தொண்டமானுக்கு அதிகம் சலுகை காட்டி வருவதாகவும் குற்றம் சாட்டினார்.

# மலையகத்தில் மதமாற்றம் நீடித்தால் இந்து, பௌத்தம் மறையலாம்

### நிரஞ்சன் விஜயரத்ன எச்சரிக்கை

(கொழும்பு)

இன்றைய மதமாற்ற நிலைமை இப்படியே தொடர்ந்து நீடித்தால் பெருந்தோட்டப் பகுதிகளில் இந்து சமயிகள் எவரும் இல்லாதநிலைமை விரைவில் ஏற்பட்டு விடும் என்று தலதா மாளிகையின் தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரத்னா தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் இக் குற்றச்சாட்டை வெளியிட்டார். அங்கு தொடர்ந்து பேசுகையில்,

ஏழ்மை நிலையில் வாழும் பௌத்தர்கள் மட்டுமன்றி இந்துக்களான தமிழர்களும் கூட கிறிஸ்தவ மதநம்பிக்கையுடையவர்களாக சில குழுக்களால் மாற்றப்பட்டு வருகின்றனர். இந்த நிலைமை நீடித்தால் பெருந் தோட்டப் பகுதிகளில் இந்து சமயம் அருகி மறைந்து போகும் நிலை ஏற்படும்.

நாட்டின் ஒரு பகுதியில் பௌத்தர்களும், இந்துக்களும் நீடித்த போர் ஒன்றில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் மறுபக்கத்தில் ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுவதன் ஊடாக பௌத்தர்களும், இந்துக்களும் மத மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில்

# புலிகளின் நடமாட்டம் அதிகரிப்பு மத்திய அமைச்சர் சவான் கவலை

(சென்னை)

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் பரவி வருவதாகவும், அது குறித்து தாம் கவலை கொண்டுள்ளதாகவும் மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி.சவான் கூறியுள்ளார்.

பெங்களூரில் நேற்று முன் தினம் செய்தியாளர்கள் மதியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் தமது நடவடிக்கைகளை பரப்ப விடுதலைப் புலிகள் முயன்று வருவதாகவும் விடுதலைப் புலிகளை ஒடுக்கும்நடவடிக்கைகளை கடுமைப் படுத்துமாறு மத்தியஅரசு முதல்வர் ஜெயலலிதாவுக்கு ஏற்கனவே கடிதம் எழுதியிருப்பதாகவும், இலங்கை அகதிகளுக்கும் புலிகளுக்குமிடையே வேறுபாடுகளைக் கண்டறிவது மிகக் கடினமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் கர்நாடக மாநிலம் உட்பட அண்டை மாநிலங்களிலும் ஊடுருவியிருக்கக் கூடிய சாத்தியப்பாடு பற்றி தெரிவித்த அவர் வீரப்பன் குழுவினருடனும் சிலர் தொடர்பு கொண்டிருக்கக் கூடும் என்றும் ஜயம் தெரிவித்தார்.

## நாட்டு முன்னேற்றத்திற்கே வெளிநாட்டு உதவிகள்

— பி. வி. நரசிம்மராவ்

(சென்னை)

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவே வெளிநாட்டு உதவிகள் வரவேற்கப்படுவதாகவும், இதனால் பொருளாதார நெருக்கடி நீங்குவதற்கு வழியேற்படுகிறது என்றும் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்

புதுடில்லியில் நேற்று முன் தினம் செய்தியாளர் கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், பொருளாதாரத்தில் வளர்ச்சிக்கு, வெளிநாட்டு மூலதனத்தை வரவேற்பதன் மூலம் நாட்டை வெளிநாடுகளுக்கு விற்று விடுவதாகக் குற்றம் சாட்டுவது அர்த்தமற்றது என்றும் தெரிவித்தார்.

நாடு பொருளாதார உறுதிப்பாட்டை வளர்த்துக் கொண்டு தொழில்நுட்ப அடிப்படையைப் பெருக்கினால் தான் உண்மையிலேயே வலுவான நிலையை அடைந்து விட்டதாகக் கருத முடியும்

## பாதுகாப்புதளபாட ஏற்றுமதி இந்திய அரசு ஊக்குவிக்கும்

— பிரணாப் முகர்ஜி

(டில்லி)

பாதுகாப்பு தளபாட ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக அதன் மீதான ஏற்றுமதி வரியை குறைப்பது உட்பட பல நடவடிக்கைகள் மேற்கொள்வது பற்றி மத்திய அரசு ஆலோசனை நடத்தும், இவ்வாறு மத்திய வர்த்தக துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

புதுடில்லியில் நேற்று முன் தினம் நிறைவு பெற்ற பாதுகாப்புதுறை சாதனங்களின் நான்காவது சர்வதேச கண்காட்சியில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்,

பாதுகாப்பு துறை சாதனங்கள் மற்றும் கருவிகளின் வர்த்தகத்தில் இருக்கும் நடைமுறைச் சிக்கல்களைத் தீர்க்க அரசாங்கம் விரும்புகிறது என்றும், சர்வதேச அளவில் குற்ற நடவடிக்கைகள் அதிகரித்து வருகையில் குறிப்பாக வளரும் நாடுகளில் பாதுகாப்புத்துறை மேலும் நவீனமயமாக்கப்பட வேண்டியது அவசியமானதாகும் என்றும் தெரிவித்தார்.

பாதுகாப்பு முறைகள் உருவாக்கத்தில் சிறப்பு பணியாற்றியுள்ள நான்கு இந்திய நிறுவனங்களுக்கும், வெளிநாடுகளைச் சேர்ந்த சில நிறுவனங்களுக்கும் இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் விருதுகளை வழங்கினார்.

## தேர்தல் சின்னங்களில் பறவை, விலங்கு இடமில்லை

(டில்லி)

இனிமேல் வரும் தேர்தல்களில் பறவைகளும், விலங்குகளும் தேர்தல் சின்னங்களாக ஒதுக்கப்படமாட்டாது என்று

அவர் மேலும் கூறுகையில்: ஏற்கனவே கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட இத்தகைய சின்னங்கள் தொடர்ந்து இருக்கும் எனவும், தமிழ்நாட்டில் ஒரு

தெல்லாம் ஒருபுறம் இருக்க, பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை இஸ்ரேல் அங்கீகரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை, மாறிவரும் உலகின் இன்றைய சூழ்நிலை உருவாக்கி உள்ளது என்பதே முக்கியமானதாகும்.

இவ்வாறாகக் கடந்த மூன்று ஆண்டுகளில் உலகில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றம் பலரை வியப்பில் ஆழ்த்தியிருப்பினும் அவை நிஜமானவை இதுவரை மூடி மறைத்து வைக்கப்பட்ட யதார்த்த நிலையின் வெளிப்பாடு. மேலும் தேசிய இனங்களின் பிரச்சினை இராணுவ பலத்தால் தீர்க்கப்பட முடியாதவை என்பது மட்டுமல்ல, நாட்டின் அபிவிருத்தி என்பதே பிரச்சினையின் தீர்வில்தான் தங்கியுள்ளது என்ற நிதர்சனத்தை உணர்த்தும் அம்சமுமாகும்.

ஆனால், இதில் வேடிக்கை என்னவென்றால் இதனை உணர்ந்து கொண்டுள்ளவை ஓரளவு வளர்ச்சி பெற்ற, வளர்ச்சி பெற எத்தனிக்கின்ற நாடுகளே ஆகும். குறிப்பாக மேற்கு நாடுகளே ஆகும். இதேவேளை, தேசிய இனங்களுக்கிடையிலான மோதல்களினால் பெரிதும் நலிவுற்றுப் போயுள்ள மூன்றாம் உலக நாடுகள் இதில் அக்கறை காட்டுவதாக இல்லை. நாட்டின் பொருளாதாரம் உள்நாட்டுப் போரினால் அழிந்து போகின்றது எனத் தெரிந்து கொண்டும் இந்நாடுகள் போரை நிறுத்திப் பிரச்சினைக்குத் தீர்வு காண விளைவதில்லை.

இந்த வரிசையிலேயே சிறிலங்காவும் உள்ளது. கடந்த பத்து வருடப் போரின் அனுபவம் தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு ஓர் இராணுவ தீர்வு காண முடியாது என்பதைத் தெரிந்திருந்தும் இனப்பிரச்சினையில் தனது கொள்கையைச் சிறிலங்கா அரசு மாற்றிக் கொள்ளவில்லை. அண்மையில் சிறிலங்கா பிரதமர் ''போரைக் கைவிட வேண்டும், ஆயுதங்களைக் கைவிட வேண்டும்'' என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் இல்லை என தெரிவித்ததில் இருந்தே புரிந்து கொள்ளலாம்.

அதாவது. உலகம் மாறினாலென்ன, யார் மாறினாலென்ன, எமது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படப் போவதில்லை என்ற சிறிலங்கா அரசாங்கத்தின் நிலைப்பாடானது ஒருபோதும் நன்மை பயக்கப் போவதில்லை. இதேவேளை பிரச்சினைகளுக்கு விட்டுக் கொடுத்து. தீர்த்து வைக்காத எந்த அரசும் நிலைத்ததில்லை என்ற வரலாற்றுப் பாடத்தைச் சிறிலங்கா புரிந்து கொள்ளாமை பெரும் வருத்தத்திற்குரியதொன்றே.

தெரிவித்துள்ளார்

புதுடில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர் கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், பொருளாதாரத்தை தாராளமயமாக்கொண்டு தொழில்நுட்ப அடிப்படையைப் பெருக்கினால் தான் உண்மையிலேயே வலுவான நிலையை அடைந்து விட்டதாகக் கருத முடியும் என்றும் குறிப்பிட்டார்,

ராஜீவ் கொலையில்

# கோபாலசாமி விஜயத்திற்கு தொடர்பில்லை

(சென்னை)

தி. மு. க எம். பி கோபாலசாமி இரகசியமாக யாழ்ப்பாணம் சென்று வந்ததிற்கும் ராஜீவ் கொலைக்கும் தொடர்பு இடையாது என விசேட நீதிமன்றில் சி. பி. ஐ. சட்டத்தரணி தெரிவித்தார். ராஜீவ் கொலையில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் விடுதலை மனுக்களை தள்ளுபடி செய்யுமாறு கோரி அவர் விசேட நீதிமன்றில் வாதாடினார்.

இந்த வழக்கில் பேரறிவாளன், இரும்பொறை ஆகிய இருவரும் ரகசியமாக யாழ்ப்பாணம் சென்று வந்ததற்காக அவர்கள் மீது கடவுச்சீட்டு வழக்கு போடப்பட்டுள்ளது. அதேபோல கடந்த 89 ஆம் ஆண்டில் தி மு,க எம்.பி வை.கோபாலசாமியும் ரகசியமாக யாழ்ப்பாணம் சென்று வந்துள்ளார், அவர் மீது கடவுச்சீட்டு வழக்கு போட முடியாதா என்று நீதிபதி சித்தீக் கேட்டார் அதற்கு விளக்கம் அளித்த சட்டத்தரணி யாழ்ப்பாணம் சென்று திரும்பிய இரு குற்றவாளிகளுக்கும் கோபாலசாமிக்கும் பின்னர் தொடர்பு ஏதும் இருக்கவில்லை என அவர் கூறினார்.

கடவுச்சீட்டு இல்லாது எவராவது நாட்டைவிட்டு வெளியேறினால் அவர்கள் மீது கடவுச்சீட்டு சட்டத்தின்கீழ் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ஆனால் வை. கோபாலசாமி குறித்து நீதிபதி கேட்ட விளக்கத்திற்கு சட்டத்தரணி நேரடியாக விளக்கம் ஏதும் கொடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# யானை மிரண்டதில் 24 பேர் பலி

(டில்லி)

இந்தியாவின் வடகிழக்கு அஸ்ஸாம் மாநிலத்தில் யானையொன்று மிரண்டதால் 24 பேர் பலியாகினர்.

இந்த 24 பேரையும் யானை மிதித்துக் கொன்றுள்ளது. 50க்கு மதிக வீடுகள் இந்த யானையால் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. சுமார் மூன்று கிராமங்களுக்குள் புகுந்த இந்த யானை இங்கும் அங்கும் ஓடி இந்த உயிர்ப் பலிகளை விளைவித்ததோடு பெரும் சேதத்தையும் ஏற்படுத்தியதாக பொலிசார் கூறினர்.

பொலிஸ் பேச்சாளர் சின்மோய் கர்மாகார் இது பற்றிக் கருத்து வெளியிடுகையில் சுமார் 40 பேர் காயமடைந்ததாகத் தெரிவித்தார்.

இரண்டு தினங்கள் தொடர்ந்து இந்த யானை கிராமங்களில் அட்டகாசம் புரிந்ததாகக் கூறப்படுகிறது. இதை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியாத நிலையில் அது அருகில் உள்ள காட்டிற்குள் புகுந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

பற்றி தெரிவித்த அவர் வீரப்பன் குழுவினருடனும் சிலர் தொடர்பு கொண்டிருக்கக் கூடும் என்றும் ஜபம் தெரிவித்தார்.

## அரபு நாடுகள் வரவேற்பு

[கெய்ரோ]

பாலஸ்தீனியர்களுக்கும் இஸ்ரேலுக்குமிடையிலான உத்தேச உடன்பாடு குறித்து ஆறு வளைகுடா அரபு நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

பாலஸ்தீனிய பிரச்சினை மற்றும் அரபு இஸ்ரேல் விவகாரத்தில் நியாயமான நிரந்தரமான விரிவான தீர்வு காணும் முயற்சியில் இது முதல் நடவடிக்கை என்ற வகையில் இந்த உடன்படிக்கை வாசகத்தை ஆதரிப்பதாக வளைகுடா ஒத்துழைப்பு சபையில் அங்கம் வகிக்கும் இந்த ஆறு நாடுகளும் கூறியுள்ளன.

## கம்யூனிஸ்ட்டுகள் இடைத்தேர்தலில் வெற்றி

[டில்லி]

மேற்கு வங்காள மாநிலத்தில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற சட்டப்பேரவை இடைத்தேர்தல்களில் ஆளும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வெற்றியீட்டியிருக்கிறது. சௌரங்கி, டார்ஜிலிங் மற்றும் கர்சியோ தொகுதிகளில் பெருமளவு வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சரவை கலைப்பு

(பக்தாத்)

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் பிரதமரை பதவி நீக்கியிருப்பதுடன், அமைச்சரவையையும் கலைத்துள்ளார்.

(டில்லி)

இனிமேல் வரும் தேர்தல்களில் பறவைகளும், விலங்குகளும் தேர்தல் சின்னங்களாக ஒதுக்கப்படமாட்டாது என்று தேர்தல் ஆணையாளர் டி.என் சேஷன் கூறியுள்ளார்.

பெங்களூரில் நேற்று முன்தினம் இந்தியாவில் தேர்தல் ஆணையகத்தின் பங்கு என்ற தலைப்பில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில்: ஏற்கனவே கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட இத்தகைய சின்னங்கள் தொடர்ந்து இருக்கும் எனவும், தமிழ்நாட்டில் ஒரு முறை ஒரு பறவை சின்னம் ஒதுக்கப்பட்டபோது எதிர்க்கட்சியினரால் அப்பறவைகள் வதைக்கப்பட்டதை அடுத்தே தேர்தல் ஆணையகம் இம்முடிவை எடுத்ததாகவும் தெரிவித்தார்.

# தேர்தல்களில்குறுக்கிடுவதை தேர்தல் ஆணையம் நிறுத்தவும்

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

தேர்தல் நடைமுறைகளில் அடிக்கடி குறுக்கிடுவதை தேர்தல் ஆணையம் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

மேற்கு வங்காள மாநிலத்தில் சௌரங்கி தேர்தல் தொகுதியில் கடந்த வெள்ளியன்று வாக்குப்பதிவு நடைபெற்ற பின்னர் வாக்குகள் எண்ணும் பணியை ஒத்திவைப்பது என்று தேர்தல் ஆணையம் எடுத்த முடிவுக்கு எதிராக கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்து அம்முடிவை செல்லுபடியற்றதாக்கி தீர்ப்பு வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

இத் தீர்ப்பிற்கு எதிராக தேர்தல் ஆணையம் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம் தேர்தல் நடைமுறைகளில் அடிக்கடி குறுக்கிடுவதை தேர்தல் ஆணையம் தவிர்க்கவேண்டும் என்றும், தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டுமே தேர்தல் ஆணையம் தலையிட வேண்டும் என்றும், சாதாரண சூழ்நிலையில் ஒரு முறை தொடங்கிவிட்ட தேர்தல் நடைமுறையில்குறிப்பாக வாக்குப்பதிவு முடிவுற்ற பின்னர் தேர்தல் ஆணையம் குறுக்கிடுவதை முற்றாக தவிர்க்க வேண்டும் என்றும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

# சோமாலியாவில் தாக்குதல் அமைதிப்படையின் 6பேர்பலி

சோமாலியத் தலைநகர் மொகாதிஸ்யூவில், சோமாலிய மக்கள் படையினர் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் ஐ நா. அமைதிப் படையைச் சேர்ந்த ஆறுபேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

நைஜீரியாவைச் சேர்ந்த ரோந்துப் படையணி ஒன்று இத்தாலியசோதனைச் சாவடி ஒன்றை நெருங்கிக் கொண்டிருந்த போது இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஐ நா. அமைதிப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மரம் நடுதல்
மாபெரும் பணி.

# ஈழநாதம்

# அமெரிக்கப் படைகளுக்கு சோமாலியாவில் நெருக்கடி

(மொகடிசியூ)

சோமாலிய தீவிர வாதிகளால் 7 நைஜீரிய ஐ நா அமைதிப்படையினர் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கப் போவதாக சோமாலியாவில் ஐ நா பணிகளை மேற்பார்வையிடும் ஓய்வு பெற்ற அமெரிக்க அட்மிரல் கூறியுள்ளார்.

இதனால் மீண்டும் சோமாலிய கிளர்ச்சியாளர்களுடனான மோதலை ஐ. நா. அமைதிப்படை ஆரம்பிக்கலாம் எனக் கருதப்படுகிறது. எனினும் சோமாலிய கிளர்ச்சியாளர்களின் இடையிலான தாக்குதலில் ஐ நா. படையின் உயிரிழப்பு அதிகரித்து வருகிறது.

ஏராளமான ஆயுதங்களுடன் அமெரிக்க படைகள் செயற்பட்ட போதிலும் ஜெனரல் ஐடீட் தலைமையிலான சோமாலிய கிளர்ச்சியாளர்கள் நினைத்த போது ஐ. நா அமைதிப்படையை தாக்கி வருகின்றனர், இந்நிலையில் அமெரிக்க இராணுவம் பெரும் தலைகுனிவை கண்டுள்ளதாகவும். உள்நாட்டுப் போர் நடக்கும் நாடுகளுக்கு அமைதி ஏற்படுத்த படைகள் அனுப்பப்படுவது தோல்வியிலேயே முடியும் என்பது காட்டப்பட்டுள்ளதாகவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## ஒய்வூதியருக்கு முற்பணம் மக்கள் வங்கி ஏற்பாடு

(தொல்புரம்)

ஓய்வூதியர்கள் முற்பணம் பெறுவதற்கான ஏற்பாடு ஒன்றினை மக்கள்வங்கி செய்யவுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள ஓய்வூதியர்களுக்கான ஓய்வுதிய வவுசர்கள் உரிய காலத்தில் வந்து சேராமல் தாமதமாகும் காலங்களில் ஓய்வூதியர்களுக்கான பணத்தேவைகளின் தன்மை கருதி ஓய்வூதியத்தின் 75 வீதமான பணத்தினை முற்பணமாக வழங்குவதற்கு யாழ் மாவட்ட மக்கள் வங்கி சம்மதம் தெரிவித்துள்ளதாகவும், முற்பணமாக வழங்கப்படும் மேற்கூறப்பட்ட 75 வீதப் பணம் பின்பு வழங்கப்படவிருக்கும் ஓய்வூதியத்திலிருந்து கழித்து எடுக்கப்படுமெனவும் வங்கி வட்டாரங்கள் ஓய்வூதியர்களுக்கு தெரிவித்துள்ளன.

## உறியடி உற்சவம்

கோப்பாய் வடக்கு கொழுவியம்பதி ஸ்ரீ சக்கராழ்வார் ஆலய உறியடித் திருநாள் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது. நாளை மறுதினம் தீர்த்த திருநாள் நடைபெறும்.


# பெண் ஆசிரியர்கள் தேவை

1. தையல்
2. மனையியல்

ஆகிய இரு பாடங்களுக்கும் பெண் ஆசிரியர்கள் தேவை.

காலம்:- 08-09-93 புதன்கிழமை மாலை 1-30 மணி

இடம்:- திருநெல்வேலி முத்துத்தம்பி ஆரம்ப பாடசாலை

நேர்முகத்தேர்வு:- உங்களது சகல சான்றிதழ்கள், அத்தாட்சிப் பத்திரங்களுடன் குறிக்கப்பட்ட திகதியில் நேரில் சமுகமளிக்கவும்.

(முறைசாராக் கல்விப் பிரிவும், ஹோட்டல் முகாமைத்துவமும், தையலுக்குமான சித்தியுடையவர்கள் விரும்பத்தக்கது.)

(5843) -செஞ்சோலை



யாழ். மாவட்ட சகல வர்த்தகர் சங்கங்களின்
உறுப்பினர்களுக்கும், ஊழியர்களுக்கும்
வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாசம் விடுக்கும்

## ஓர் முக்கிய அறிவித்தல்

இன்று 07-09-93 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஓர் முக்கிய கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இரு பகுதியினருக்கும் இது முக்கியமான கலந்துரையாடலாக இருப்பதால் சகல வர்த்தக உறுப்பினர்களும், ஊழியர்களும் தவறாது கூட்டத்தில் பங்குபற்றுமாறு பணிவாக கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி. இங்ஙனம்,

21, மேல்மாடி, நவீன சந்தை, யாழ்ப்பாணம். வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாசம், (4000)


## விரிவுரைகள்

(யாழ்ப்பாணம்)

பட்டப்பின் கல்வி டிப்ளோமா 1993, 1994 ஆகியவற்றிற்கான பயிற்சி நெறிகளை மேற்கொள்வதற்கு தமது பெயர்களை பதிவுசெய்தவர்களுக்குரிய விரிவுரைகள் எதிர் வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் காலை 8 00 மணி தொடக்கம் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சிநெறிக்கு பதிவு செய்தவர்கள் மற்றும் இதில் விரிவுரையாற்றும் விரிவுரையாளர்கள் ஆகியோர் தவறாது கலந்துகொள்ளுமாறு இணைப்பாளர் திரு சி. புலேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஏற்கனவே யாழ். இந்துக் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றில் நடைபெற இருந்த இரண்டு விரிவுரைகளும் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது (பா)

## தேர் உற்சவம்

[யாழ்ப்பாணம்]

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா நாளை நடைபெறவுள்ளது.

கடந்த மாத இறுதியில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய இவ் ஆலயத்தின் மஹோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

நாளை நடைபெறவிருக்கும் தேர்த்திருவிழாவையும் வழமை போல் மிகவும் சிறப்பாக நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## உற்சவம்

[குருநகர்]

யாழ் அடைக்கல மாதா ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை கொண்டாடப்பட இருக்கிறது.

இன்றுமாலை 4 45 மணிக்கு நற்கருணை ஆராதனை, ஆசீர்வாதம் என்பன நடைபெறும். [21]

## பாலஸ்தீனம் தனிநாடாகும் இஸ்ரேல் தூதுவர் நம்பிக்கை

[டெல்அவிவ்]

இன்னும் இரு தினங்களில் இஸ்ரேல் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரிக்கும் அறிவிப்பு வெளியாகும் என தான் எதிர்பார்ப்பதாக பி எல் ஓ. அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

பாலஸ்தீனம் எதிர்காலத்தில் ஓர் தனிநாடாகும் என அமெரிக்காவிற்கான இஸ்ரேல் தூதுவர் கூறியுள்ளார். இஸ்ரேல் - பாலஸ்தீன சமரச ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு அரபுநாடுகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் கடிதங்கள் மூலம் கோரியுள்ளார்.

## சந்திரிகா குமாரணதுங்க லண்டன் பயணம்

(கொழும்பு)

மேல் மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க லண்டனில் விடுதலைப் புலிகள் பிரமுகர் லோரன்ஸ் திலகரை சந்தித்து பேசத் திட்டமிட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

திருமதி சந்திரிகா குமாரணதுங்க கடந்த வெள்ளியன்று லண்டன் புறப்பட்டுச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது சில வாரங்களுக்கு முன்னர் அமைச்சர் தொண்டமானும் லண்டன், பாரிஸ் ஆகிய நாடுகளுக்கு பயணமானது குறிப்பிடத்தக்கது. [நி]

## தாண்டிக்குளம் படையால் பெண்மணி கைது

[வவுனியா]

வவுனியா தாண்டிக்குளம் படையினரால் பெண்மணியொருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது வட்டுக்கண்டல் காத்தான் குளத்தைச் சேர்ந்த சீமான் பிள்ளை திரேசம்மா [55] என்பவரே படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர் தடுத்துவைக்கப் பட்டுள்ளமைக்கான காரணம் தெரியவரவில்லை.

இதேசமயம் தடைசெய்யப் பட்ட பொருட்களுடன் வடபகுதி வந்ததாகக் கூறப்படும் லொறி ஒன்றை ஈரப்பெரிய குளம் படையினர் தடுத்து வைத்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. தடைசெய்யப்பட்ட பொருள்களுடன் வடபகுதிவந்தபோது கடந்த மாத ஆரம்பத்தில் வவுனியாவில்கைதான ஒரு பெண் உட்பட ஏழுபேர் வவுனியா பொலிசாரால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## காரைநகர்

வத்தினர் தினசரி தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர்.

காரைநகரிலிருந்தும், ஊர்காவற்றுறைப் பகுதியிலிருந்தும் மேற்படி குடிமக்கள் வாழும் பகுதிகள் மீது நடாத்தப்பட்டு வரும் எறிகணைத் தாக்குதல்கள் காரணமாக பல குடியிருப்புக்கள் சேதமடைந்துள்ளன. மூளாயில் உள்ள மு சுப்பையா என்பவரது வீடு பலத்த சேதமடைந்துள்ளதுடன் மேலும் சில குடியிருப்புக்களும் இத்தாக்குதல்களில் சேதமடைந்துள்ளன.

## வடமராட்சி கடலில் ஹெலி நோட்டம்

(வடமராட்சி)

சிறிலங்கா உலங்குவானூர்தி ஒன்று வடமராட்சிக் கடலோரப் பகுதியில் சில மணி நேரம் வட்டமிட்டு நோட்டமிட்டது.

கடற்பகுதிக்கு நேற்றுகாலை 7. 45 மணிக்கு வந்த உலங்குவானூர்தி முனை முதல் தொண்டமனாறு வரை தாழப் பறந்து வட்டமிட்டு நோட்டமிட்டதை அவதானிக்க முடிந்தது.

கடலில்மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களுக்கு மேலாகவே இந்த உலங்குவானூர்தி தாழப்பறந்து நோட்டமிட்டது. [யோ]

## தப்பியோடிய

களில் அரசுக்கெதிரான கிளர்ச்சியில் சம்பந்தப்பட்டதற்காக சிறையில் வைக்கப்பட்டிருந்தவர்கள் என்றும் மற்றைய இருவரும் கொள்ளைச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் கூறப்படுகிறது.

நேற்றுக்காலை நடைபெற்ற இச் சம்பவத்தில் ஐந்து சிறைக் காவலர்களும் காயமடைந்தனர்.

## படையினர்

வைத்து பொதுமக்கள்மீது கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டதில் இப் பகுதியை சேர்ந்த ஒருபிள்ளையின் தந்தையாரான பூபாலப்பிள்ளை கோபாலப்பிள்ளை (26) என்பவர் மரணமானார். இதன்பின் படையினர் இப் பகுதியில் 8 வீடுகளையும், 2 கடைகளையும் தீவைத்து எரித்தனர்.

## இந்தியா முதலிடத்தில்

[சிங்கப்பூர்]

சிங்கப்பூரில் நடைபெற்ற தடகள விளையாட்டுப்போட்டிகளில் இந்தியா 12 தங்கப் பதக்கங்களையும், மூன்று வெள்ளிப் பதக்கங்களையும், ஒரு வெண்கலப் பதக்கத்தையும் பெற்று முன்னணியில் இருப்பதாகக் கூறப்படுகிறது இப் போட்டிகளில் ஜப்பான் இரண்டாம் இடத்தையும், அவுஸ்திரேலியா மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளன.

★

ஜேர்மனியின் ஹம்பேர்க் நகரில் நடைபெற்று முடிந்த நான்கு நாடுகளுக்கு இடையிலான ஹொக்கிப் போட்டியில் அவுஸ்திரேலியா ஒலிம்பிக் சாம்பியனான ஜேர்மனியை 3-2 என்ற கோல்கணக்கில் வென்றுள்ளது.

## கிளாலி

தை மேற்கொள்ள காத்திருந்த மக்கள் சிதறி ஓடிப்பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்து கொண்டனர் பலர் தமது பயணங்களை கைவிட்டு திரும்பியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஆலங்கேணி பகுதியிலும் குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டதாகவும் குண்டு வெடிப்பு சத்தங்கள் கேட்டதாகவும் திரும்பியவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதை அடுத்து பூநகரி ஆனையிறவு பகுதிகளில் இருந்து கிளாலிப் பகுதியை நோக்கி நள்ளிரவு வரை தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இத்தாக்குதல்களால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை.

## 31-ம் நினைவு நாள்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

06-09-93

நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சங்கங்களின் சமாசம்,
(4099)





பரிசுகள்

1ஆம் பரிசு செ. பாஸ்கரன் வல்லிபுர குறிச்சி.
2ஆம் பரிசு என்.அன்னலட்சுமி கைதடி மேற்கு, கைதடி.
3ஆம் பரிசு கே.கேதீஸ்வரன் பலப்பை லேன் தெற்கு, பருத்தித்துறை.

ஆறுதல் பரிசுகள்

1. சாமி [கல்வாய், சாவகச்சேரி] 2 க திலீபன் [செட்டிவளவு, மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்], 3 தி. சந்திரலிங்கம் [சக்தி ஸ்ரோர்ஸ் V. V. T.], 4. பி. மோகன் [சாவகச்சேரி]. 5. நாகேந்திரன் [வல்விபுர குறிச்சி] 6. கிறிஸ்ர மேரி கில்டா [திருநெல்வேலியர்மடம், மிருசுவில்], 7. சி. எஸ். பாலன் [618, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்], 8. தி. சந்திரலிங்கம் [சக்தி ஸ்ரோர்ஸ், V. V. T.], 9. திருமதி ச. விஜயசர்மா 86/174, கண்டி வீதி யாழ்ப்பாணம்.], 10. என். நாகேந்திரன் [வல்விபுர குறிச்சி]

6-வது போட்டியில் இன்றே பங்குபற்றுங்கள். பங்குபற்றுவதற்கான நிபந்தனை ஜாம், கோடியல் அல்லது பியர் ஏதாவது 5 போத்தல்களை கொடுத்து அதற்கான பணத்துடன் ஒரு அதிர்ஷ்ட லாபச் சீட்டையும் பெற்றுக் கொள்ளவும்.

புதிய முகவர்களாக:
1. பேரம்பலம் மருந்துக் கடை சுன்னாகம்
2. மாருதி ஸ்ரோர்ஸ் கே. கே. எஸ். வீதி, வல்வெட்டித்துறை.
3. வி.சுந்தரலிங்கம் ரஜனி பீடாஸ்ரோல் இமையாணன், உடுப்பிட்டி.
4. செல்வராசா ஸ்ரோர்ஸ் முதலாம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி-7365)




## 2ஆம் லெப். எழில்ராஜ்

(திருக்கோவில், அம்பாறை.)

தாயக மண்ணில்: 1973-12-1

வீரச்சாவு: 1993-8-7

இலட்சியப் பயணம் தொடர்கையில்
இரவும் பகலும் ஈழத்துக்கு உழைத்து
உன்னத நெருப்பாறாக ஓடினாய்
மரணம் உன்னிடத்தே மண்டியிடுகிறது
பயணம் பல படிகளைத் தாண்டி இலட்சிய ஆறாக
இலக்கை நோக்கி நகர்கிறது
இதனால் உனக்கு மரணமே இல்லை.

(5907) —நண்பர்கள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மிகேல்கிரா வீதி, 81ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

...விருப்புக்களும் இத்தாக்குதல்களில் சேதமடைந்துள்ளன.

### போரை

தம், முன்வைக்கப்படும் அரசியல் தீர்வுத் திட்டம் பாதுகாப்பு இணைப்புக் குழுவின் போக்கைப் பாதிக்கலாம் என்றார்.

தேசியபாதுகாப்பு அமைச்சர் பதவி ஏற்படுத்தப்பட்டதும் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் அரசியல் தலையீடு அதிகரிக்கலாம்.

புதிய அமைப்பு வடக்கில் இராணுவ நடவடிக்கைகளை அதிகரிக்கலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### பாதுகாப்பு

சேமநலவசதிகளையும் அமைச்சர் கண்டறிந்து கொண்டார். அம்பாறை மாவட்டத்தில் உள்ள கஞ்சிக்குடிச்சாறு, காரைதீவு, பாணம போன்ற பல்வேறு அதிரடிப்படை முகாம்களுக்கும் அமைச்சர் சென்றார். அத்துடன் படையினரது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழும் மக்களது வாழ்க்கை நிலைபற்றியும் அமைச்சர் அறிந்து கொண்டார். பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் மற்றும் அதிரடிப்படைத் தளபதி ஆகியோர் உட்பட பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் பலரும் அமைச்சருடன் மேற்படி பகுதிகளுக்கு விஜயம் செய்துள்ளனர்

### ஆயுதப்

குழு அமைக்கப்படுவதற்கான திட்டம் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவின் பணிப்புரைக்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு படைகளுக்கு பணிப்புரை விடுப்பதுடன் முக்கியமான பகுதிகளில் ஒருங்கிணைக்கப்பட்ட தலைமையகத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும் இக்குழு பொறுப்பாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## 06-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 108·0

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

40-7899, 41-8031, 28-9449, 26-6026, 24-5721, 26 5576, 41-9746, 27-9825, 27-5633, 41-9211, 22-6163.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-9622, 24-7173.

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா கதிர்காமர்

ஊரிக்காட்டை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தங்கம்மா கதிர்காமர் 06-09-1993 அன்று திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் இறைபதம் அடைந்துவிட்டார். அன்னார் காலம் சென்ற சிந்தாமணி ஓவசியரின் (P W.D ஓவசியர்) அன்பு மனைவியாரும், பூரணம், புவனேஸ்வரன் (ஐக்கிய நாடுகள்சபை ஆலோசகர் PONAPE) ஸ்வர்ணா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலம் சென்ற நடராசா (புகையிரத அதிபர்), மேபல், சுப்பிரமணியம் (O. A ஆசிரியர் பயிற்சி கலாசாலை கோப்பாய்) ஆகியோரின் மாமியாரும், தங்கமலர்ராணி (சங்கீத ஆசிரியை, யா/வல்லை மகளிர் வித்தியாலயம்), பவானி (கணக்காளர் கொழும்பு), சாந்தா (ஒஸ்ரேலியா), தம்பா (CHEMIST கொழும்பு), வானதி, பபிசங்கர் (ரெக்னிசியன் J T. I), கௌசிபா, தாரணி, ஸ்ரான்லி கல்லூரி உயர்தர மாணவிகள்) சுஜீத்தா (மாணவி யாழ்/இந்துமகளிர் கல்லூரி), கதிர்காமலிங்கம் (வர்த்தகர் (திந்தி) ரஞ்சன் Executive G O H, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஹனிபேபி ரஞ்சுவின் ஆருயிர் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஊரிக்காடு மயானத்திற்கு தகனக் கிரியைக்காக இன்று (07-09-1993) பிற்பகல் 1.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
A P சுப்பிரமணியம் (O. A)
(மருமகன்)

பாடசாலை வீதி,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை. (5906)